# கிறீஸ்து பிறப்பு விழா 2011

## ஈழத் தமிழருக்கு ஒரு நற்செய்தியும் வாழ்த்தும்

### 1. கிறீஸ்துவின் பிறப்பு விழா?

ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் 25 கிறீஸ்துவின் பிறப்பு விழாவாக

கிறீஸ்தவர்களினால் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

இவ் விழாவை கிறீஸ்தவர்கள் தமக்குரிய முறையில் ஆலயங்களிலும் பங்குகளிலும் பாடசாலைகளிலும் மற்றும் கிறீஸ்தவ அமைப்புக்களிலும்

இனிமையான இசை நிறைந்த வழிபாடுகள், உறவினர் நண்பர்கள் சந்திப்புகள்,

அன்பளிப்புகள், கொடைகள் பரிமாற்றங்கள் ஊடாக தாங்களும் மகிழ்ந்து

மற்றவரையும் மகிழ்விக்க முயற்சி எடுப்பார்கள்.

இவ் விழாக் கொண்டாட்டங்களில் பிற சமயத்தவர்களும் மத வேறுபாடின்றி கலந்து கொள்வது மிகவும் வரவேற்கத்தக்கது.

ஆகையினால் இவ் விழாவின் மையப் பொருளையும்

இவ்விழா எமக்கு, விசேடமாக ஈழத் தமிழருக்கு, தரும் நற்செய்தியையும்

நாங்கள் எல்லோரும் உள்வாங்கி பயன் பெறுவது மிகவும் பொருத்தமானது.

### 2. கிறீஸ்தவர்கள் விசுவசிப்பது?

பாவத்திலும் அதன் அடிமைத்தனங்களிலும் மூழ்கி

இருளில் தவிக்கும் மனிதனை மீட்க

இறைமகன் இயேசு மனிதனானார்.

தமது போதனை, பாடுகள், சிலுவை மரணம், உயிர்ப்பு

இவைகளினால் மனிதனுக்கு விடுதலையும் புது வாழ்வும் வழங்குகின்றார்.

இந் நிகழ்வுகள் மனிதறிவிற்கு அப்பாற்பட்டவைகளாயினும்

இதுவே கிறீஸ்தவர்களின் விசுவாசம்.

### 3. இவ் விழாவின் செய்தி?

ஆகவே கிறீஸ்து பிறப்பின் விழாவின் செய்தி

இறைவன் மனிதனைத் தேடி மனிதனாக வந்தார்

அவனுடைய மீட்பிற்காக, விடுதலைக்காகவே வந்தார்

அவனை அடிமையாக்கும் பாவங்களிலும் இருளிலுமிருந்து

விடுதலை கொடுக்கவே எம்மிடம் வருகிறார்.

இறைவன் இனாமாக மனிதனுக்கு அளித்த

மனிதம், மனித மாண்பு, மனித உரிமை, இவைகள் மாத்திரமல்ல

தாயகம், மொழி, கலை, கலாச்சாரம் இவைகளுமே

இவ் விழாவின் மையப் பொருளாகின்றன.

இவைகளைக் காப்பதும் வளர்ப்பதும் எமது தலையான கடன்!

## 4. ஆகையால் ஈழத் தமிழருக்கு வரும் நத்தார் நற்செய்தி யாது?

எம்மை அடிமைகளாக்கும் பாவங்களும் இருளும் யாது?

சிங்கள இனமா அதன் அரசாங்கமா? அது உண்மையின் ஒரு சிறு பகுதியே!

நாமே எமது பாவங்களினாலும் அறியாமையினாலும் எம்மை அடிமைகளாக்கிக் கொண்டே வாழ்ந்து வருகின்றோம்.

அரசியல் முயற்சிகள் எமது போராட்டத்தின் ஒரு சிறு பகுதியே!

மிக முக்கிய பகுதி நாம் தனியாகவும் கூட்டாகவும்

இறைவனுடைய உதவியுடனும் வழிகாட்டலிலும்

சுய விடுதலைக்காக முயற்சிக்க வேண்டும்.

இதற்காக நேர்மையுடன் எமது பாவங்களை, அடிமைத்தனங்களை இனங்கண்டு

துணிவுடன் ஏற்று வீரத்துடன் செயற்பட வேண்டும்.

சுய விடுதலையின்றி இன விடுதலை சாத்தியமாகாது.

அன்பான சகோதர சகோதரிகளே! இவ் விழாவின் செய்திக்கேற்ப

நாங்கள் அனைவரும் ஒன்றாக பிரார்த்திப்போம் முயற்சிப்போம்.

உங்கள் அனைவருக்கும் எனது நல் வாழ்த்துக்களும் ஆசியும்.

புதிய ஆண்டின் போராட்ட சவால்களுக்கு முகங்கொடுக்க எம்மைப் புதுப்பிப்போம்!

**பணியாளன்**

**எஸ். ஜே. இம்மானுவேல்**

**ஜேர்மனி, 24.12.2011**